பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**17 01 2026** **7 15**

சனிக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

**1.** நாட்டின் முதலாவது வந்தே பாரத் படுக்கை வசதி கொண்ட ரயிலை பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று தொடங்கி வைக்கிறார்.

**2.** மும்பை மாநகராட்சியில் பிஜேபி தலைமையிலான மஹாயுதி கூட்டணி தனிப்பெரும்பான்மை பெற்றுள்ளது.

**3.** தேசியத் தலைநகர் தில்லியில் காற்றின் தரம் மிக மோசமடைந்து வருவதைக் கருத்தில் கொண்டு, காற்றுத் தர மேலாண்மை ஆணையம் அவசரக்கால நடவடிக்கைகளை அமல்படுத்தியுள்ளது.

**4.** கிரீன்லாந்தைக் கையகப்படுத்தும் திட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் நாடுகள் மீது கடுமையான வர்த்தக வரி விதிக்கப்படும் என்று அமெரிக்க அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப் எச்சரித்துள்ளார்.

**5.** 19 வயதுக்குபட்பட்டோருக்கான ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இந்தியா இன்று பங்களாதேஷ் அணியை எதிர்கொள்கிறது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

நாட்டின் முதலாவது வந்தே பாரத் படுக்கை வசதி கொண்ட ரயிலை பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று தொடங்கி வைக்கிறார்.

மேற்குவங்க மாநிலம் **Malda** நகர் ரயில் நிலையத்தில் நடைபெறும் விழாவில் அவர் பங்கேற்கிறார்.

முதலாவது வந்தே பாரத் படுக்கை வசதி கொண்ட ரயில் **Howrah** - குவஹாத்தி இடையே இயக்கப்பட உள்ளது.

நீண்டதூர பயணத்தை பாதுகாப்பாகவும், சொகுசு வசதியுடனும் குறைந்த நேரத்தில் முடிப்பதற்கும் இந்த ரயில் உதவிகரமாக இருக்கும்.

**Malda-**வில் **3** ஆயிரத்து **250** கோடி ரூபாய் மதிப்பிலான நலத்திட்டங்களையும் பிரதமர் தொடங்கிவைக்கிறார்.

மேற்குவங்க மாநிலத்தில் நான்கு முக்கிய ரயில்வேத் திட்டங்களுக்கும் அவர் அடிக்கல் நாட்டுகிறார்.

**Balurghat - Hili** இடையே புதிய ரயில் பாதையையும், ஜல்பைகுரியில் ரயில் போக்குவரத்து பராமரிப்புக்கான நவீன வசதிகளையும், சிலிகுரியில் ரயில் என்ஜின் பராமரிப்பு மையத்தையும், வந்தே பாரத் ரயிலில் பராமரிப்பு மற்றும் நவீன வசதிகளுக்கான மையத்தையும் பிரதமர் தொடங்கி வைக்க உள்ளார்.

தமிழகத்திற்கான **3** அம்ரித் பாரத் ரயில்கள் உட்பட **4** ரயில் சேவைகளையும் பிரதமர் தொடங்கி வைக்க உள்ளார்.

<<<<>>>>

போலந்து துணைப் பிரதமர் திரு. **Radoslaw Sikorski** மூன்று நாள் பயணமாக இன்று இந்தியா வருகிறார்.

நாளை ஜெய்ப்பூரில் நடைபெற உள்ள இலக்கியத் திருவிழாவில் அவர் பங்கேற்கிறார்.

நாளை மறுநாள் புதுதில்லியில் வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் எஸ். ஜெய்சங்கரை அவர் சந்தித்து இருதரப்பு உறவுகள் குறித்து விரிவாக பேச்சுகள் நடத்த உள்ளார்.

<<<<>>>>

மேற்குவங்க மாநிலத்தின் மூத்த அரசியல் தலைவர் திரு. முகுல் ராயை சட்ட மன்ற உறுப்பினர் பதவியிலிருந்து தகுதி நீக்கம் செய்த கொல்கத்தா உயர்நீதிமன்றத்தின் உத்தரவிற்கு உச்சநீதிமன்றம் இடைக்காலத் தடை விதித்துள்ளது.

**2021**-ஆம் ஆண்டு சட்டப்பேரவைத் தேர்தலில் பாஜக சார்பில் கிருஷ்ணாநகர் வடக்கு தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்ற முகுல் ராய், பின்னர் ஆளும் திரிணாமுல் காங்கிரஸ் கட்சியில் இணைந்தார்.

கட்சித் தாவல் தடைச் சட்டத்தின் கீழ் அவரைத் தகுதி நீக்கம் செய்யக் கோரி எதிர்க்கட்சித் தலைவர் திரு. சுவேந்து அதிகாரி உள்ளிட்டோர் மனு தாக்கல் செய்தனர்.

இது தொடர்பான வழக்கில், முகுல் ராயைத் தகுதி நீக்கம் செய்து கொல்கத்தா உயர் நீதிமன்றம் கடந்த நவம்பர் மாதம் உத்தரவிட்டது.

இந்த உத்தரவை எதிர்த்து முகுல் ராயின் மகன் சுப்ரான்ஷு ராய் தாக்கல் செய்த மனுவை நேற்று விசாரித்த உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதி சூர்ய காந்த் மற்றும் நீதிபதி ஜோய்மால்யா பாக்சி அடங்கிய அமர்வு, உயர்நீதிமன்றத் தீர்ப்பிற்குத் தடை விதித்தது.

<<<<>>>>

மும்பை மாநகராட்சி தேர்தலில் பிஜேபி தலைமையிலான மஹாயுதி கூட்டணி தனிப்பெரும்பான்மை பெற்றுள்ளது.

மொத்தமுள்ள 227 இடங்களில் இந்தக் கூட்டணிக்கு 118 இடங்கள் கிடைத்துள்ளது.

பிஜேபி 89 இடங்களிலும், திரு. ஏக்நாத் ஷிண்டே தலைமையிலான சிவசேனா 29 இடங்களிலும் வெற்றி பெற்றுள்ளது.

உத்தவ் தாக்கரே தலைமையிலான சிவசேனா - மகாராஷ்டிரா நவநிர்மான் சேனா, சரத் பவார் தலைமையிலான தேசியவாத

காங்கிரஸ் ஆகிய கட்சிகள் அடங்கிய கூட்டணி 72 இடங்களில் வெற்றி பெற்றுள்ளன.

காங்கிரஸ் 24 இடங்களிலும், சமாஜ்வாதி கட்சி 2 இடங்களிலும் வெற்றி பெற்றுள்ளன.

<<<<>>>>

**Al-Falah** பல்கலைக்கழகத்தின் நிர்வாக அறங்காவலர் மற்றும் வேந்தர் ஜவாத் அகமது சித்திக் மற்றும் அவருக்குத் தொடர்புடையவர்களுக்கு எதிராக, சட்டவிரோத பணப்பரிமாற்றத் தடுப்புச் சட்டத்தின் கீழ் அமலாக்கத் துறை குற்றப்பத்திரிகை தாக்கல் செய்துள்ளது.

**Al-Falah** அறக்கட்டளை மற்றும் அதன் கல்வி நிறுவனங்கள் மூலம் ஈட்டப்பட்ட சட்டவிரோத வருமானம் மற்றும் அதனைப் பணப்பரிமாற்றம் செய்த குற்றச்சாட்டுகள் தொடர்பாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு தில்லி செங்கோட்டை அருகே நடைபெற்ற கார் குண்டு வெடிப்பு தொடர்பாக தில்லி போலீசார் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கைகளின் அடிப்படையில் இந்த விசாரணையை அமலாக்கத் துறை மேற்கொண்டது.

சுமார் **493** கோடி ரூபாய் சட்டவிரோதமாக திரட்டப்பட்டுள்ளதாக விசாரணையில் தெரியவந்துள்ளது.

<<<<>>>>

இந்தியா மற்றும் ஜெர்மனி இடையே தொலைத்தொடர்பு ஒத்துழைப்பு குறித்த கூட்டு பிரகடனம் கையெழுத்தாகியுள்ளது.

இது குறித்த தகவலை வெளியிட்டுள்ள மத்திய தகவல் தொடர்பு அமைச்சகம், வளர்ந்து வரும் மற்றும் எதிர்காலத் தொழில்நுட்பங்களில் இரு நாடுகளும் இணைந்து செயல்படவும், சிறந்த நடைமுறைகள் மற்றும் தகவல்களைப் பகிர்ந்து கொள்ளவும் இரு நாடுகளும் ஒப்புக்கொண்டுள்ளதாகத் தெரிவித்துள்ளது.

இந்த மாதத் தொடக்கத்தில் ஜெர்மனி நாட்டின் சான்சலர் திரு. **Friedrich Merz** இந்தியாவிற்கு மேற்கொண்ட அதிகாரப்பூர்வப் பயணத்தின் போது இந்த ஒப்பந்தம் கையெழுத்தானது.

உள்ளடக்கிய மற்றும் நிலையான டிஜிட்டல் மாற்றத்தை எட்டுவதற்கு இந்த ஒத்துழைப்பு பெரும் உறுதுணையாக இருக்கும் என்று அமைச்சகம் கூறியுள்ளது.

<<<<>>>>

திரிபுரா மாநிலத்தில் வரவிருக்கும் தன்னாட்சி மாவட்ட கவுன்சில் தேர்தலிலும், தற்போது எதிர்க்கட்சிகள் வசம் உள்ள தொகுதிகளிலும் வன்முறையைத் தவிர்த்து, வளர்ச்சிப் பணிகளின் மூலமாகவே வெற்றி

பெறுவதே பிஜேபியின் முக்கிய நோக்கம் என்று அம்மாநில முதலமைச்சர் திரு. மாணிக் சாஹா, தெரிவித்துள்ளார்.

நேற்று அம்மாநிலத்தில் பர்ஜலா என்ற இடத்தில் நடைபெற்ற கட்சி நிர்வாகிகள் கூட்டத்தில் பேசிய அவர், வன்முறை மற்றும் அதிகார பலத்தின் அடிப்படையில் செய்யப்படும் அரசியல் நீண்ட காலத்திற்கு நிலைக்காது என்று குறிப்பிட்டார்.

<<<<>>>>

அமெரிக்கா கிரீன்லாந்தைக் கையகப்படுத்தும் திட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் நாடுகள் மீது கடுமையான வர்த்தக வரி விதிக்கப்படும் என்று அமெரிக்க அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப் எச்சரித்துள்ளார்.

வெள்ளை மாளிகையில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் பேசிய அவர், ஆர்க்டிக் பகுதியில் ரஷ்யா மற்றும் சீனாவின் ஆதிக்கம் அதிகரித்து வருவதைத் தடுக்க கிரீன்லாந்து அமெரிக்காவின் கட்டுப்பாட்டில் இருப்பது அவசியம் என்று குறிப்பிட்டார்.

இருப்பினும், தன்னாட்சி அதிகாரம் கொண்ட கிரீன்லாந்தை விற்க முடியாது என்று டென்மார்க் திட்டவட்டமாக மறுத்துவிட்டது.

இந்த விவகாரத்தில் மேற்கத்திய நாடுகளின் செயல்பாடுகள் சர்வதேச விதிகளின் வீழ்ச்சியைக் காட்டுவதாக ரஷ்ய வெளியுறவுத் துறை செய்தித்தொடர்பாளர் திருமதி மரியா ஜாகரோவா விமர்சித்துள்ளார்.

இதற்கிடையே, கிரீன்லாந்தில் தனது ராணுவப் பாதுகாப்பை பலப்படுத்தப்போவதாக டென்மார்க் அரசு அறிவித்துள்ளது.

அதற்கு பிரிட்டன் பிரான்ஸ் உள்ளிட்ட பல ஐரோப்பிய நாடுகளும் ஆதரவு தெரிவித்துள்ளன.

<<<<>>>>

புதுதில்லியில் நடைபெற்று வரும் குடியரசு தின முகாமின் ஒரு பகுதியாக, தேசிய மாணவர் படை மாணவர்களின் வருடாந்திர குதிரையேற்ற விளையாட்டு போட்டி நேற்று நடைபெற்றது.

இதில் என்.சி.சி மாணவர்கள் தங்களின் அபாரமான குதிரையேற்றத் திறமையை வெளிப்படுத்தினர்.

இந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்ட என்.சி.சி தலைமை இயக்குநர் லெப்டினன்ட் ஜெனரல் வீரேந்திர வாட்ஸ், மாணவர்களின் சிறப்பான செயல்பாட்டைப் பாராட்டினார்.

குதிரையேற்றப் பயிற்சியானது மாணவர்களிடையே ஒருங்கிணைப்பு, வலிமை, ஒழுக்கம், தன்னம்பிக்கை மற்றும் விட்டுக்

கொடுக்காத விளையாட்டுத் திறனை வளர்க்கிறது என்று அவர் குறிப்பிட்டார்.

இந்த ஆண்டு நடைபெற்ற குதிரையேற்றப் போட்டியில் **40** மாணவர்களும், **20** மாணவிகளும் பங்கேற்றனர்.

<<<<>>>>

**19** வயதுக்குபட்பட்டோருக்கான கிரிக்கெட் போட்டியில் இந்தியா இன்று பங்களாதேஷ் அணியை எதிர்கொள்கிறது.

இந்தப் போட்டி ஜிம்பாப்வேயின் **Bulawayo**-வில் இன்று பிற்பகல் ஒரு மணிக்கு தொடங்குகிறது.

---------------

மகளிர் ப்ரீமியர் லீக் ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டியில் பெங்களூரு அணி **32** ரன் வித்தியாசத்தில் குஜராத் அணியை வென்றது.

நவி மும்பையில் நேற்றிரவு நடைபெற்ற ஆட்டத்தில் முதலில் விளையாடிய பெங்களூரு அணி, நிர்ணயிக்கப்பட்ட **20** ஓவரில் **7** விக்கெட் இழப்புக்கு **182** ரன் எடுத்தது.

183 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் விளையாடிய குஜராத் அணி 18 புள்ளி 5 ஓவரில் 150 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

இன்று நடைபெறும் ஆட்டங்களில் மும்பை அணி - உத்தரப்பிரதேச அணியையும், தில்லி அணி - பெங்களூரு அணியையும் எதிர்கொள்கின்றன.

**<<<<The End>>>>**